the Harijan Welfare Department for this course only from the year 1951–52. As the Scheduled Caste converts were then treated as Backward Classes for purposes of admission in the colleges they were classified as Backward Classes for purposes of granting scholarships from the Harijan Welfare Department for Law Course.

SRI S. LAZAR : ஏனைய சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்று சொன்னாலும் கூட, கல்வித் துறையிலாவது அதே சலுகைகள் கொடுக்க சர்க்கார் திட்டத்தை வகுத்திருக்கிறபொழுது, அதுவும் சட்டக் கல்லூரியில் படிக்கக்கூடிய ஹரிஜன கிறிஸ்துவ மாணவர்களுக்கு மறுக்கப்பட்டது ஏன் ?

THE HON. SRI P. KAKKAN : கல்வித் துறை என்றால், காலேஜில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் போன்றது கிடையாது. மற்றபடி கல்வித் துறையில் என்னென்ன உதவி கொடுக்கவேண்டுமோ, அதையெல்லாம் அரசாங்கம் கொடுத்துக்கொண்டு வருகிறது.

SRI P. G. MANICKAM : ஷெட்யூல்டு வகுப்பினர் ஜாபிதாவில் எந்தெந்த இதர வகுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் ? அல்லது சேர்க்கப்படுவதற்கு விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தனியாக கேள்வி போடவேண்டும்.

SRI S. NAGARAJA MONIGAR : சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மக்கள் ஹரிஜன அருந்ததியர்கள், காந்திஜியின் மனத் திருப்திக்கு உகந்த வகையில் அவர்களுக்காக ஒரு தனி இலாகா ஏற்படுத்தி அந்த வேலையை செய்துகொண்டிருக்கிறோம். தாழ்ந்த தன்மையுள்ள வேறு மதத்தைச் சேர்ந்தவர்களையும் இதில் சேர்த்துகொண்டு ஹரிஜன மக்களுக்கு எப்படி வேலை செய்ய முடியும் ? ஆகவே, சர்க்கார் அதற்குத் தகுந்த முறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை செய்யவேண்டும். மற்ற இனங்களுக்கு அவர்களுக்குத் தகுந்த முறையில் வேலை செய்வார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : முதலில் இந்த இலாகாவானது ஏற்பட்டது கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியபடிதான். ஹரிஜனங்களை முதலில் கவனிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இது முதலில் ஏற்பட்டது. இதர சமூகத்தினருடைய நன்மையையும் கவனிக்க வேண்டுமென்ற கருத்தில், ஹரிஜன கிருஸ்துவர்களும் ஏழைகளாக இருப்பதால் அவர்களுடைய நிலைமையையும் கவனிக்கவேண்டுமென்று பின்னால் அரசாங்கம் அதற்கு ஒரு முடிவு எடுத்திருக்கிறது.

Liquor permits

* 478 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. Minister for Home be pleased to state the number of liquor permits issued in the Madras City in the years 1956-57 and 1957-58 to Indian women?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the number of fresh liquor permits issued to Indian women in the Madras City during 1956-57 and 1957-58 is two and five respectively. The number of liquor permits renewed during the aforesaid year is eleven and ten respectively.

SRI A. A. RASHEED : Were the permits issued to women on doctors' recommendation or on their application stating that they were addicts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : All permits are issued on medical grounds.

[18th February 1959

SRI A. GOVINDASAMY : இப்படி குடிப்பதற்கு லைசென்ஸ் கொடுப்பதினால் எஜமானனோ, எஜமானியோ குடித்துவிட்டு மீதியை வேலைக்காரர்கள் குடித்துவிட்டு சங்கமத்திற்கு உள்ளாகிறார்களே ? ஆகவே, குடிப்பதற்கு லைசென்ஸ் வழங்குவதை அறவே ஒழிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ? இந்த பெர்மிட் முறையினால் பல ஊழல்கள் நடப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி கொடுப்பது "மெடிகல் கிரௌண்ட்ஸ்" பேரில்தான். இப்பொழுது இருக்கிற அரசியல் அமைப்பு சட்டத்தின்படி அதைத் தவிர்ப்பதற்கு இல்லை.

SRI A. A. RASHEED : May I know whether cases of drunkenness were reported among the permit-holders?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information.

Vanoli

* 479 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) when the representation was made by the Government to the Union Government to adopt the term ' Vanoli ' in Tamil broadcast of Akashvani ; and

(*b*) with what results?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) In August 1958, the Minister for Home, Madras, requested the Minister for Information and Broadcasting, Government of India, to consider the suggestion that in the Tamil announcements from the All-India Radio, Tiruchirappalli, the word ' Vanoli ' may be used rather than ' Akashvani ' ;

(*b*) The Minister for Information and Broadcasting, Government of India, has stated that the All-India Radio has adopted the word ' Akashvani ' on its All-India name in India, and it has, therefore, now become a kind of trade mark. The word is taken from Kannada and has been adopted as it is understood everywhere in the country. It could not be dropped as it has been adopted as a patent word for the All-India Radio. He, however, assured that he would be instructing the authorities that in the announcements of broadcasts in Tamil ' Vanoli ' might be used and that there was no objection to ' Vanoli ' being used side by side with ' Akashvani '.

SRI M. KALYANASUNDARAM : சென்னையிலும் டெல்லியிலுமிருந்து அஞ்சல் செய்யக்கூடிய தமிழ் செய்தி அறிக்கையிலும் வானொலி என்று ஏன் உபயோகப்படுத்தப்படவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது உபயோகப்படுத்துகிறார்கள்.

SRI N. R. THIAGARAJAN : ஐயா, மழை காலங்களில் வானில் உண்டாகும் இடி, பேரிடி, குமுறல் போன்றவைகளை வானொலி என்று அழைப்பது பொருத்தமாக இருக்கும். ஆகவே, இந்த அர்த்தமற்ற, பொருத்தமற்ற, கருத்துமற்ற வானொலியை ஒழித்து ஒதுக்கித்